சுங்க உத்தியோகத்தர்களின் வெகுமதி நிதியம் - 2020

---

# 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சுங்க உத்தியோகத்தர்களின் வெகுமதி நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக மன்றத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது.

பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களின் தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நியம இலக்கம் 01 இன் 01 ஆம் பந்திக்கு முரணாக தண்டனை மற்றும் அரசுடமையாக்கல் வருமானம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க வேண்டும். |
| (ஆ) நியம இலக்கம் 01 இன் 128 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி நிலைமை கூற்று, விரிவான வருமானக் கூற்று மற்றும் உரித்து மாற்றங்கள் கூற்று என்பவற்றின் முன்னால் | முன்பாக ஒவ்வொரு உருப்படி களுக்குரிய தொடர்புடைய தகவல்களுக்குரிய பதிவுகள் குறிப்பிடப்பட்டிருந்த போதும் தவறுதலாக குறிப்பு இலக்கம் குறுக்கு பதிவாக | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | ஒவ்வொரு உருப்படிகளுக்கரிய பதிவுகளில் உள்ள தொடர்புடையதகவல்களின் வரவு தொடர்பினை காண்பிக்க வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | காண்பிக்கப்படவில்லை. எதிர்வரும் ஆண்டில் கணக்குகளை சமர்ப்பிக்கும் போது இக் குறைபாடுகளை சீராக்குவதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. | |
| (இ) | நியம இலக்கம் 03 இன் 54 ஆம் பந்தியின் பிரகாரம் முன்னைய காலப்பகுதிக்கரிய தவறுகளை சீர் செய்தால் அத்தவறின் தன்மை போன்ற விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உரிமை மாற்றங்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 8,687,637 ஆன தவறுகளை திருத்தும் பதிவுக்குரிய நியமத்தின் பிரகாரம் வெளிப் படுத்தப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்குகின்றேன். தவறை திருத்துவதற்கான விரிவான பதிவொன்று மூலம் வெளிப்படுத்தப்படவில்லை. | - மேற்படி - |

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தண்டனை மற்றும் அரசுடமை யாக்கல் பெறுமதியில் 50 சதவீதம் சுங்க உத்தியோகத்தர் களின் வெகுமதி நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவதுடன் அத்தொகை சுங்க புலனாய்வு களுக்கு பங்களிப்புச் செய்த ஒற்றர்களுக்கும் சுங்க உத்தியோகத்தர்களுக்கு இடையே பகிர்ந்தளித்தல் இடம்பெறும். நிதியத்திற்கு கிடைக்கும் தொகையில் வெவ்வேறு ஒதுக்கங்களுக்காக சிறிய சதவீதமொன்று ஒதுக்கீடு செய்யப்பட்ட போதும் ஒவ்வொரு ஒதுக்கத்திற்கும் ஒதுக்கீடு செய்யும் பெறுமதி தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப் படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே வெகுமதிகளை கொடுப்பனவிற்காக நிதியத்திற்கு கிடைக்கும் பணத்தில் வெவ்வேறு சிறிய ஓதுக்கங்களுக்காக கிடைக்கும் பணம் நிதியத்தின் மிகையாக | தண்டனை மற்றும் அரசுடமையாக்கல் பெறுமதியில் அபபுலனாய்விற்காக செலவினம் இருந்தால் அதனை கழித்து எஞ்சிய தொகையில் 50% சுங்க உத்தியோகத்தர்களின் வெகுமதி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட போதும் அம்முழு பெறுமதியில் முழுமையாக ஒற்றர்களுக்கும் சுங்க உத்தியோகத்தர்களுக்கு இடையே பகிர்ந்தளித்தல் இடம்பெறாது அவ்வப்போது சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும் திணைக்கள கட்டளைகளை அடிப்படையாக கொண்டு | கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் இறுதிக் கணக்குகளில் (விரிவான வருமானக் கூற்று) செலவினத்தை விஞ்சிய வருமானமாக காண்பிக்கப்பட்டிருந்த தொகை ரூபா 34,143,154 ஆக இருந்தது. | வெகுமதி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட பெறுமதியில் கீழே காட்டப்பட்ட ஒவ்வொரு உப நிதியத்திற்காக ஒதுக்கீடு செய்தல் இடம்பெறும் ஆதலால் நிதியத்திற்கு மாற்றப்படும் மொத்த மீதிகள் பகிர்ந்தளித்தல் இடம்பெறாது<br>• Fuel fund<br>• Narcotic fund<br>• 2.5% reward fund<br>• Pool payment<br>ஒவ்வொரு ஆண்டும் இவ்வகையான உப நிதியங்களுக்கு மாற்றப்படும் தொகை திரட்டிய நிதியத்தில் காணப்படுகின்றது. இது தொடர்பான விபரமான அறிக்கை கணக்கிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கணக்காய்வு அவதானிப்புடன் இணங்க முடியாது | |

**1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு திறைசேரியின் பேணிச் செல்லப்பட்டிருந்த புத்தகங்களின் பிரகாரம் நிதியத்தின் மீதி மற்றும் திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் மீதிகளுக்கு இடையே ரூபா 22,406,445 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | இது முன்னைய ஆண்டு களிலிருந்து இருந்து வரும் மீதியொன்றாகும்.இது தொடர்பாக பரீட்சித்து தேவையான சீராக்கங்களை செய்வதற்கு குறித்துக் கொண்டேன். | வேறுபாட்டிற்கு காரணம் இனங்காணப்பட்டு இணக்கக்கூற்று தயாரிக்கப்பட வேண்டும் |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1968 இன் 17 ஆம் இலக்க சுங்க கட்டளைச் சட்டத்தின் | வெகுமதி நிதியத்திலிருந்து வெகுமதி தொகையை | வெகுமதி தொகை கொடுப்பனவு தொடர்பாக 1869 இன் 17 ஆம் | நிதியத்தை பகிர்ந்தளிப்பதற்காக பொருத்தமான |

| | | | |
|---|---|---|---|
| 153(2)(ஆ) ஆம் பிரிவு. | பகிர்ந்தளிப்பதற்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாடினை பெற்று அதற்காக பொருத்தமான திட்ட முறைமையொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், 1988 சனவரி 28 ஆம் திகதிய பீஎல் 118 ஆம் இலக்க திணைக்கள கட்டளைக்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாடு பெற்றுக் கொண்டதாக உறுதிப்படுத்தாமல் 1999 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான 22 வருட காலத்தில் வெகுமதிப் பணமாக உத்தியோகத்தர்களுக்காக ரூபா 16,520,215,868 தொகையும், ஒற்றர்களுக்காக ரூபா 1,997,381,541 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. | இலக்க சுங்க கட்டளைச் சட்டத்தின் 153(2)(ஆ) ஆம் பிரிவின் பிரகாரம் உங்களது அவதானிப்புடன் இணங்க முடியாது. 1988 இன் 118 ஆம் இலக்க திணைக்கள கட்டளையை விநியோகிக்கும் போது தேவையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப் பட்டுள்ளதென கருத்திற் கொள்ளப்பட்டிருந்ததுடன் மேலும் இது தொடர்பாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். எதிர்வரும் நடவடிக்கை தொடர்பாக தீர்மானம் எடுத்தல் நிதி அமைச்சின் மூலம் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | நடைமுறையொன்று தயாரிதல் வேண்டும். |

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சுங்க தவறுகள் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற சுங்க புலனாய்வுகளின் போது பொதுவான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய ஆகக் குறைந்த வரி வருமானத்தின் அளவை அறவிடுதல் தொடர்பாக கவனத்தில் கொள்ளாது, இழக்கப்பட்ட வருமானத்தையும் உள்ளடக்கும் வகையில் சுங்க தவறுகள் தொடர்பாக தண்டங்களை விதித்து அவ்வாறு விதிக்கப்பட்ட தண்டப்பணத் தொகையில் 50 சதவீதம். | | |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர்களுக்கும் ஒற்றர்களுக்கும் வெகுமதியளிப்பதற்கு பயன்படுவதன் காரணமாக அரசாங்கத்திற்கு வருமானத்திற்கு பாதகமாக தாக்கமளிப்பது தொடர்பில் வருடக் கணக்காக கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தது, எனினும் இது தொடர்பாக எவ்வித ஆராய்ந்து பார்த்தல்களும் இடம்பெற்றிருக்கவில்லை. இந்நிலைமையை கருத்திற் கொள்ளாமையால் உத்தியோகத்தர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட வெகுமதி தொகைகளின் அளவு அதிகரித்து காணப்பட்டமை தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டதுடன் இது தொடர்பாக கீழே குறிப்பிடுகின்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | நாட்டில் காணப்படுகின்ற சுதந்திர பொருளாதார கொள்கையின் காரணமாக இறக்குமதியாளர்களிடம் இருந்தும் ஏற்றுமதியாளர்களிடமிருந்தும் ஏற்பட்டுள்ள சிக்கல்களுக்கு ஈடுசெய்யும் வகையில் சுங்க கட்டளைச் சட்டத்தை போல இந்த நிதியங்களில் சட்ட ரீதியான நிதி ஏற்பாட்டை முறையாகவும், கால ரீதியாகவும் திருத்த வேண்டிய தேவை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | பொருத்தமான முறையில் சுங்க கட்டளைச் சட்டத்தை சட்டமாக்கி நிதியங்களில் சட்ட ஏற்பாடுகளை அவ்வப்போது திருத்தம் செய்யப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்திலும் குறித்த பிரகாரம் திருத்தம் செய்வது தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். | தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | சுங்க கட்டளைச் சட்டத்தின் 162 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் சுங்க நியதிகளை மீறுவது தொடர்பாக உரித்தாகின்றவை தொடர்பாக சுங்க பணிப்பாளருக்கு பொருத்தமான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. எனினும் அரச வருமானத்தை பாதுகாப்பது தொடர்பாக இலங்கை சுங்கத்தினால் காண்பிக்கும் கவனம் திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை. | சுங்க வருமானத்தை உழைக்கும் போது அரச வருமானத்தை பாதுகாப்பதற்காக அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் | அரச வருமானத்தை பாதுகாப்பது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும் |

## (ஆ) நிலுவை தண்டப் பண வருமானம் சேகரித்தல்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட போதும் கணக்கீடு செய்யப்படாத ரூபா 2,051,340,784 ஆன தண்டப் பண வருமானத்தில் 1 ஆண்டிற்கும் 5 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட ரூபா 561,540,349 தொகையும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 182,762,354 தொகையும் உள்ளடக்கப்பட்டிருந்தன. | இந்நிலுவை பணத்தை சேகரிப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அக்குழுவினால் இவ்வாறான சிக்கல்களுக்காக முறையான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டதன் பின்னர் அவற்றை செயற்படுத்துவதாக குறித்துக் கொண்டதாக | நிலுவை தண்டப் பணத்தை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | CINT/HQB018/2013 ஆம் இலக்க சுங்க புலனாய்விற்குரிய கோப்பு ரூபா 1,955,942 செலுத்திய பின்னர் ரூபா 2,212,586 மீதியுடன் காணாமல் போயிருந்தது. மேலும், ENSP/ CASE/2009/09 ஆம் இலக்க சுங்க புலனாய்விற்குரிய நிலுவைத் தண்டப் பணமாக கணக்காய்வு திகதியில் ரூபா 350,000 ஆன மீதியொன்று<br><br>காணப்பட்ட போதும்இந்தக் கோப்பும் காணாமல் போயிருந்தது. இந்த கோப்புகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 103(1) மற்றும் 104(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து அறிக்கையிடுவதற்கு குறித்துக் கொண்டுள்ளேன். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1963 இன் 17 ஆம் இலக்க சுங்க கட்டளைச் சட்டத்தின் 153(2)(ஆ) பந்தியின் பிரகாரம் பல்வேறு சுங்க தவறுகளுக்காக விதிக்கப்படுகின்ற தண்டப் பணம் மற்றும் அரசுடமையாக்கப்பட்ட பொருட்கள் விற்பனையினால் கிடைக்கின்ற தொகையில் 50 சதவீதத்திற்கு சமமான தொகையொன்று சுங்க உத்தியோகத்தர்களின் வெகுமதி நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவதுடன், | | |

| | | | |
|---|---|---|---|
| | சுங்க வரி மோசடிகள் வெளிப்படுத்துதல், கட்டுப்படுத்துதல் மற்றும் தடுத்தல் போன்ற நோக்கங்களில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் ஒற்றர்களுக்கும் வெகுமதிகளை வழங்குவதற்காக இந்த நிதியம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான கிடைத்த கொடுப்பனவுகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (அ) | 2012 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை கூட்டு மொத்தமாக ரூபா 12,249 மில்லியன் தொகையொன்று உத்தியோகத்தர்களுக்கும் ஒற்றர்களுக்கும் இடையே பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், அதில் ரூபா 10,807 மில்லியன் அதாவது, 88.22 சதவீதம் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். | நிதியத்தை பராமரிப்பது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். |
| (ஆ) | 2012 ஆம் ஆண்டின் போது உத்தியோகத்தர்களுக்கும் ஒற்றர்களுக்கும் செலுத்தப்பட்ட தொகை ரூபா 787 மில்லியன் அளவாக இருந்த போதிலும், 2019 வரையில் அது ரூபா 1,400 மில்லியன் வரை அதாவது, 78 சதவீதத்தினால் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. அத்தோடு 2020 ஆம் ஆண்டில் நாட்டில் இம்பெற்ற ஏற்றுமதி இறக்குமதி மட்டுப்படுத்தல், கொவிட் 19 தொற்று காரணமாக இறக்குமதி ஏற்றுமதி வியாபாரம் கருத்திற் கொள்ளக்கூடிய அளவிலர் குறைவான மட்டத்தில் காணப்பட்டது. இருந்த போதும் 2020 ஆம் ஆண்டில் உத்தியோகத்தர்களுக்காக ரூபா 986 மில்லியன் வெகுமதி தொகையும் ஒற்றர்களுக்காக ரூபா 124 மில்லியனும் வெகுமதியாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டில செலுத்தப்பட்டுள்ள ரூபா 985 மற்றும் ரூபா 124 மில்லியன் தொகை 2020 ஆம் ஆண்டிற்குரிய புலனாய்வுகளுக்கு செலுத்திய தொகையல்லாமல் இருந்ததுடன் அது 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்குரிய புலனாய்வு பூர்த்தி செய்யப்பட்டவை களுக்காகும். மேலும் இந்த வெகுமதி நிதியத்தின் முதன்மை நோக்கங்களில் ஒன்று சுங்க மோசடிகளை சரியாக கண்டறிந்து, உத்தியோகத்தர்களை ஊக்குவிப்பதாகும். எனவே, இந்த வெகுமதி திட்டத்தின் மூலம் சுங்க வரி மோசடிகள் கண்டறியப்பட்ட போதிலும், அந்த மோசடிகளை ஒட்டுமொத்தமாக கட்டுப்படுத்தவோ, குறைக்கவோ நேரடியாக முடியாதுள்ளது. குறிப்பாக கணனிகள் மற்றும் ஏனைய தொழில்நுட்ப முன்னேற்றத்துடன் மிகவும் திட்டமிடப்பட்ட முறையில் உலகெங்கிலும் மோசடிகள் மற்றும் முறை கேடுகள் இடம் பெற்றுள்ளதை அவதானிக்க முடிகிறது. அதன் பிரகாரம் இது போன்ற மோசடியாக பணம் சம்பாதிக்கும் போக்கு நாட்டிலும் | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | | அதிகரித்து வருவது அவதானிக்கப்பட்டது. இறக்குமதியாளர்களின் மேன்முறையீடுகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கை களாலும் புலனாய்வுகள் தாமதமாவதற்கு காரணமாகின்றன. | |
| (இ) | வெகுமதி நிதியத்தின் உப நிதியம் ஒன்றான எரிபொருள் நிதியத்திற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 33,528,128 தொகை செலவு வைக்கப்பட்டிருந்தது. அந்த நிதியத்தை ஸ்தாபித்ததன் நோக்கம் சுங்க புலனாய்வுகளுக்கு தேவையான எரிபொருள் செலவினத்தை தீர்த்துக் கொள்வதாக காண்பிக்கப்பட்ட போதிலும், புலனாய்வு நடவடிக்கை களுக்காக செலவிடப்பட்ட எரிபொருள் கிரயம் திணைக்களத்தின் பொது செலவின தலைப்பிற்கு செலவினப் பொறுப்பாக வைக்கப்பட்டதால் மீளாய்வாண்டின் போது அந்த நிதியத்திலிருந்து எவ்வித செலவினமும் செய்யப்பட்டிருக்க வில்லை. எவ்வாறாயினும், பொதுவான தேவையினை கவனத்தில் கொள்ளாமல் தொடர்ச்சியாக இந்த நிதியத்திற்கு பணத்தை சேகரித்து வைத்தமையால் மீளாய்வாண்டின் இறுதியில் அந்த மீதி ரூபா 588,807,229 ஆக காணப்பட்டது. | அவதானிப்புடன் இணங்குகின்றேன். எவ்வாறாயினும், இந்த எரிபொருள் நிதியத்தை ஸ்தாபித்ததன் முதன்மை நோக்கம் சுங்க நிவாரணங்களுக்காக ஏதேனும் மிகை எரிபொருள் தேவையொன்று இருந்தால் அதற்காக பயன்படுத்து வதற்காகும். LTTE யுத்த நிலைமை உருவாகுவதற்கு முன்னர் திணைக்களத்தினால் செயற்படுத்திய சுங்க செயற்பாடுகளுக்காக கடற்படை பிரிவில் (Marine Unit) எரிபொருள் தேவைகளைப் பூர்த்தி செய்வதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது நடைபெற்ற யுத்த நிலைமையில் இத்துறை செயற்படாததன் காரணமாக நிதியின் மீதித் தொகை திரட்டி காணப்படுகின்றது. | - மேற்படி - |
| (ஈ) | வெகுமதி நிதியத்தின் உப நிதியமான போதைப் பொருள் சுற்றிவளைப்புக்களுக்காக பங்குபற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவுகளுக்காக போதைப் பொருள் நிவாரண நிதியம் (நாகொட்டிக் நிதியம்) இற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 9,753,579 ஆன அதிகரிப்பொன்று காணப்பட்ட போதும் ஆண்டின் போது ரூபா 3,414,100 தொகை மாத்திரமே செலவு வைக்கப்பட்டிருந்தது. | திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் இந்த உப நிதியத்திற்குரிய நிதியம் மாற்றப்பட்டிருந்ததுடன் அவ்வாறு மாற்றப்பட்ட தொகை ரூபா 9,753,579 ஆன அல்ல. அதாவது ரூபா 13,167,679.61 என சீராக்கம் செய்யப்பட வேண்டும். சுற்றறிக்கையை அடிப்படையாக கொண்டு ஆண்டில் மேற்கொள்ளப் பட்ட கோரல்களுக்காக இக்கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (உ) | புலனாய்வு நடவடிக்கைகளுக்காக நேரடியாக பங்களிக்காதிருந்த போதிலும், உதவி சேவைகளை வழங்குகின்ற பிரிவுகளின் உத்தியோகத்தர்களுக்காக கொடுப்பனவு செய்வதற்காக ஸ்தாபிக்கப்பட்டுள்ள 2.5 சதவீத நிதியத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 17,908,423 தொகை செலவு வைக்கப்பட்ட போதிலும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்நிதியத்தின் மீதி ரூபா 182,494,596 ஆக இருந்தது | 2020.12.31 இல் 2.5 சதவீதம் உப நிதியக் கணக்கின் மீதி ரூபா 116,044,277 அல்ல. ரூபா 182,494,596 என சரி செய்யப்பட வேண்டும். | - மேற்படி - |